Royal College of Anaesthetists

# ஒரு பொது உணர்ச்சிநீக்கி அல்லது உணர்ச்சி உள்ளடக்கம் செய்து கொண்ட ஒருவரைப் பராமரிப்பது

சிகிச்சைக்காக உணர்ச்சி உள்ளடக்கம் செய்துகொண்ட அல்லது ஒரு பொது உணர்வுநீக்கியின் கீழ் ஒரு செயல்முறை செய்து கொண்ட என்னுடைய ஒரு உறவினர் அல்லது நண்பரை வீட்டுக்கு அழைத்துச் செல்லும்படி நான் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளேன்.

## நான் என்ன எதிர்பார்க்க வேண்டும்?

உணர்ச்சி உள்ளடக்க மருந்து அல்லது, உணர்ச்சிநீக்கி, சில நோயாளிகளுக்கு அவர்களின் சிகிச்சைக்குப் பிறகு சற்று குழப்பத்தையும் நிலையற்ற தன்மையையும் ஏற்படுத்தும். முக்கியமாக, அது அவர்களின் முடிவெடுக்கும் தன்மையைப் பாதிக்கும் அதனால் அவர்களால் தெளிவாக சிந்திக்க முடியாமல் போகலாம். அதனால் இது அடுத்த நாள் வரை, 24 மணி நேரங்கள் வரை நீடிக்கலாம். தயவு செய்து இந்த சமயத்தில் அவர்களை கவனித்துக் கொள்ளுங்கள்.

## எனது நண்பர் அல்லது உறவினரை நான் எப்போது அழைத்துக் கொள்ள முடியும்?

மருத்துவமனையில் உள்ள ஊழியர்கள், அவர்கள் மீட்டெழுந்த பிறகு அவர்களுடன் செல்ல நீங்களும் இருக்கும்போது மட்டுமே அவர்களை வீட்டிற்குச் செல்ல அனுமதிப்பார்கள். நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும், மேலும் அவர்களை கார் அல்லது டாக்ஸி மூலம்

வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் - பொது போக்குவரத்தில் போவது உசிதமல்ல.

சில நோயாளிகள் உணர்ச்சி உள்ளடக்கம் அல்லது அறுவைச் சிகிச்சைலிருந்து மீட்டெழ, மற்றவர்களை விட அதிக நேரம் எடுப்பதால், அவர்களால் சரியான நேரத்தை சொல்ல முடியாது.

## நான் என்ன செய்ய வேண்டுமென்று என்னிடம் சொல்லப்படுமா?

டாக்டர்கள் தங்கள் செயல்முறைக்குப் பிறகு என்ன செய்ய வேண்டும், மற்றும் அவர்கள் கூடுதலான மருந்துகள் எடுக்க வேண்டுமா என்பதை எழுத்துப்பூர்வமாக அறிவுறுத்துவார்கள்.

தயவுசெய்து, இந்த அறிவுறுத்தல்களை உங்கள் உறவினர் அல்லது நண்பருடன் படித்து, அவர்கள் அதைச் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் அல்லது அவர்கள், வீட்டிற்கு வந்த பிறகு அவர்களின் சிகிச்சை குறித்து ஏதேனும் கவலைகள் இருந்தால் தொடர்பு கொள்ள ஒரு தொலைபேசி எண் இருக்கும்.

## என்னுடைய நண்பன் அல்லது உறவினர் வீட்டில் என்ன செய்ய வேண்டும்?

அவர்கள் ஜாக்கிரதையாக மீட்டெழுவதில் உதவுவதற்காக, அவர்கள், ஓய்வெடுக்க வேண்டும்.

அவர்கள் நிலையற்ற நிலையில் இருந்தால், அவர்களுக்கு தேவைப்பட்டால் அவர்கள் உங்களுடன் நடக்க வேண்டும், மற்றும் முடிந்தால் படிக்கட்டுகளைத் தவிர்க்க வேண்டும்.

அவர்களுடைய மருத்துவர் வேண்டாம் என்று சொன்னாலே தவிர, அவர்கள் அவர்களுடைய வழக்கமான மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

## அவர்கள் என்ன செய்யக் கூடாது?

ஒரு ஊணர்ச்சிநீக்கி எடுத்துக்கொண்ட பிறகு அல்லது ஒரு உணர்ச்சி உள்ளடக்க மருந்து கொடுக்கப்பட்ட பிறகு, 24 மணி நேரம் வரை அவர்கள் தெளிவாக சிந்திக்க முடியாமல் போகலாம். இந்த காலகட்டத்தில் அவர்கள் பின்வருபவைகளை செய்யக்கூடாது:

- குழந்தைகள் அல்லது பிற நபர்களை அவர்களின் பராமரிப்பில் வைத்துக்கொள்ளக்கூடாது
- ஒரு வாகனத்தையோ அல்லது ஒரு சைக்கிளையோ ஓட்டக்கூடாது
- சமைக்கவோ அல்லது எந்த ஒரு இயந்திரத்தைப் பயன்படுத்தவோ கூடாது
- அவர்களின் உடல்நிலை சரியாக இருக்கிறது என்று அவர்கள் உணர்ந்தாலும் கூட, எந்த ஒரு முக்கிய முடிவுகளையும் எடுக்கக்கூடாது
- சமூக ஊடகங்களில் எதையும் வெளியிடக்கூடாது
- மது குடிக்கக்கூடாது.

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொருப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எங்களிடம் சொல்லுங்கள்

இந்த துண்டுப்பிரசுரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

நீங்கள் கூற விரும்பும் கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், அவைகளை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள் patientinformation@rcoa.ac.uk


**மயக்க மருந்து நிபுணர்களின் ராயல் கல்லூரி (Royal College of Anaesthetists)**
Churchill House, 35 Red Lion Square, London WC1R 4SG
020 7092 1500


## www.rcoa.ac.uk


## முதல் பதிப்பு 2018

இந்தத் துண்டுப்பிரசுரம், பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மறுபரிசீலனை செய்யப்படும்.



**© 2018 Royal College of Anaesthetists**
நோயாளி தகவல் பொருட்கள் தயாரிப்பதற்காக, இந்தத் துண்டுப்பிரசுரம் நகல் எடுக்கப்படலாம். தயவுசெய்து, இந்த உண்மை மூலத்தை மேற்கோள் காட்டுங்கள். இந்த துண்டுப்பிரசுரத்தின் ஒரு பகுதியை நீங்கள் மற்றொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், பொருத்தமான ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் மற்றும் லோகோக்கள், பிராண்டிங் மற்றும் படங்கள் அகற்றப்பட வேண்டும். இன்னமும் அதிக தகவலுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.